**ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டம் - 2022**

---

ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 5678 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் சீ(3) ஆம் பந்தி, II ஆம் பிரிவு, 2 ஆம் பட்டியலுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளதுடன் தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு மூலம் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்திச் சேவைகளின் தரத்தினை உயர்த்துவதற்கான சமமான அணுகுமுறையை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி சேவைகளை வழங்குவதை விரிவுபடுத்தி வலுப்படுத்துதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,250 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியனாகக் காணப்பட்டதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளினை 2016 மார்ச் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2023 யூன் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(5) | ஒரு இடைக்கால முற்பணம் வழங்கப்படும் போது, செலவழிக்கப்படாத தொகையானது முற்பணம் வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முனனர் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிலுவையில் உள்ள செயற்திட்டத்தின் முற்பணம் ரூபா 28.6 மில்லியன் ஆகும். | ரூபா 28.6 மில்லியனில் தீர்வு செய்யப்படாத முற்பணங்கள் ரூபா 28.3 மில்லியன் ஆனது இச் செயற்திட்டத்திற்கு மற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக் கான தேசிய சிறுவர் செயலகங்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பிற செயற்பாடுகளுக் காக வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கி உள்ளது. | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பெருந்தோட்ட மனித வளங்கள் நம்பிக்கைப்பொறுப்பினால் ரூபா 214 மில்லியனுக்கு வழங்கப்பட்ட 19 நிர்மாணத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் 2022 திசெம்பர் 31 இல் கலைக்கப்பட்டதுடன் நிதியாண்டின் இறுதிக்குள் அந்த திட்டங்களுக்காக ரூபா 37 மில்லியன் செலுத்தப்பட்டது. இந்த 19 கலைக்கப்பட்ட செயற்திட்டங்களும் 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ரூபா 330 மில்லியனுக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் , ஒப்பந்த நிர்வாகத்தின் பலவீனம் காரணமாக ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு ரூபா 153 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | பந்தி (ஆ) இல் குறிப்பிட்டுள்ளபடி, ஒப்பந்த நிர்வாகத்தின் பலவீனத்தால் நட்டம் ஏற்படவில்லை, மாறாக நாட்டில் உள்ள கட்டுப்பாடற்ற சூழ்நிலையால் இழப்பு ஏற்பட்டது என்பது தெளிவாகிறது. அந்தச் சூழலை இந்தச் செயற்திட்டத்தால் கட்டுப்படுத்த முடியாது என்பதால், உலக வங்கியின் இணக்கப்பாட்டுடன் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் முன்னாள் செயலாளர், மிகுதிப் பணிகளுக்கான விலைமனுக்களை மீண்டும் கோருவதற்கும் முடிவுறுத்துவதற்கும் அங்கீகாரம் அளித்துள்ளார். | ஆரம்ப செயல்நடவடிக்கைத் ஒப்பந்த நிர்வாகம் மேலதிக செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.2 வளங்களின் பயன்பாடு

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 135 மில்லியன் ஏற்பாடானது செயற்திட்ட அபிவிருத்திச் செலவினமாகப் பெறப்பட்டு, 2022 திசெம்பர் 31 இல் அந்தத் தொகையானது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் பணம் மற்றும் பணத்திற்குச் சமமான இருப்புத் தொகையாக விளைவற்றதாக வைக்கப்பட்டிருந்தது. | காலை உணவு திட்டத்தை செயல்படுத்துவதற்கு உலக வங்கியின் அங்கீகாரம் பெறப்படுவதிலான தாமதம் மற்றும் எதிர்பாராத விதமாக 19 நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டதால், இந்த தொகை ஏற்பட்டது. (ரூபா.134,910,632/-). இருப்பினும், இது 2023 சனவரி (இணைப்பு 1) மாதத்தில் செலவழிக்கப்பட்டுள்ளதுடன் நீண்ட காலமாக பணம் சேமிக்கப்படவில்லை. | கையில் இருக்கும் பணத்தின் மீதான நிதிக் கட்டுப்பாடுகள் வலுவாக இருக்க வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இன் வங்கி கூற்றுக்களின்படி செயற்திட்டத்திற்காக ரூபா 2 மில்லியன் பெறப்பட்டபோதிலும் அது அங்கீகரிக்கப்படவில்லை | செயற்திட்டமானது வைப்புச் செய்பவர்களைக் கண்டறிவதற்கு வங்கியைத் தொடர்ந்தும் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதுடன், மேலும் சில நேரங்களில் வங்கியும் தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரங்கள் மூலம் செய்யப்பட்ட வைப்புக்களை அடையாளம் காணத் தவறிவிடும். இதன் காரணமாக, வங்கிக் கணக்குகளில் அங்கீகரிக்கப்படாத பற்றுச்சீட்டுகள் தொடர்ந்தும் காணப்படுவதுடன், மேலும் மேற்படி காரணங்களால் அவற்றை அடையாளம் காண்பதற்கு நேரம் எடுக்கப்படுகின்றது.. | நேரடி வைப்புக்களுக்கான நிதிக் கட்டுப்பாடுகள் வலுவாக இருக்க வேண்டும். |